# ஜனவரி 1-15 நடப்பு நிகழ்வுகள்-
# வணிகம்

*(TNPSC, SSC, BANK ,UPSC, RAILWAY)*

EXAMS DAILY
தமிழ்

Visit Us - https://tamil.examsdaily.in

Face book - ExamsDaily Tamil

# வணிகம்

1. **அந்நிய செலாவணி கையிருப்பு 41,112 கோடி டாலர்**

- இந்தியாவின் அந்நிய செலாவணி கையிருப்பு இதுவரை இல்லாத அளவுக்கு உயர்ந்து 41,112 கோடி டால ராக உயர்ந்துள்ளது. கடந்த வாரத்தில் (ஜனவரி 5) 175 கோடி டாலர் உயர்ந்து இந்த மதிப்பை எட்டியுள்ளது. அதற்கு முந்தைய வாரத்தில் அந்நிய செலாவணி கையிருப்பு 444 கோடி டாலர் உயர்ந்து 40,936 கோடி டால ராக இருந்தது. 2017-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் முதன்முறையாக இந்தியாவின் அந்நிய செலாவணி கையிருப்பு 40,000 கோடி டாலரை கடந்தது குறிப்பிடத்தக்கது.

2. **பொறுப்புகள் அல்லாத இயக்குநர்களின் தகவல்களை சேகரிக்க திட்டம்: மத்திய அமைச்சர் பிபி சவுத்ரி தகவல்**

- நிறுவனங்களில் எந்தவித பொறுப்புகள் அல்லாமல் உள்ள இயக்குநர்களின் தகவல்களை சேகரிக்க திட்டமிட்டுள்ளதாக மத்திய நிறுவனங்கள் துறை இணையமைச்சர் பிபி சவுத்ரி தெரிவித்துள்ளார். இந்திய நிறுவனங்கள் நலத்துறை கல்வி நிறுவனத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்து கொண்ட போது இதனைத் தெரிவித்தார்.

3. **ஒற்றை பிராண்ட் சில்லரை வர்த்தகங்களில் 100% அன்னிய நேரடி முதலீடு: மத்திய அமைச்சரவை ஒப்புதல்**

- ஒற்றை பிராண்ட் சில்லரை வர்த்தகத்தில் 100 சதவீத அந்நிய நேரடி முதலீட்டிற்க மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் மத்திய அமைச்சரவைக் கூட்டம் டெல்லியில் இன்று நடைபெற்றது. இந்த கூட்டத்தில், ஸ்டார்ட் அப் நிறுவனங்கள் எளிமையாக தொழில் செய்யவும், அந்நிய முதலீடு அதிகரிக்கவும் அந்நிய நேரடி முதலீட்டிற்கான விதிமுறைகளில் மாற்றங்கள் செய்ய ஒப்புதல் அளிக்கப்பட்டது.
- அதன்படி, ஒற்றை பிராண்ட் சில்லரை வர்த்தகத்தில் 100 சதவீத நேரடி அந்நிய முதலீடு செய்ய ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. ஒற்றை பிராண்டுகளில் சில்லரை வர்த்தகத்தில் ஈடுபடும் நிறுவனங்கள் மத்திய அரசின் அனுமதி பெற்று 49 சதவீத அளவிற்கு அந்நிய நேரடி முதலீடு செய்ய நடைமுறை தற்போது பின்பற்றப்பட்டு வருகிறது. இனிமேல் அரசின் அனுமதியின்றி, 100 சதவீத அளவிற்கும் இத்துறையில் அந்நிய நேரடி முதலீடு செய்ய முடியும்.

4. **2018-ம் நிதியாண்டில் ஜிடிபி வளர்ச்சி விகிதம் 6.5%: மத்திய புள்ளியியல் அலுவலகம் கணிப்பு**

- புள்ளியியல் அலுவலகம் கணித்துள்ளது. கடந்த நிதியாண்டில் ஜிடிபி வளர்ச்சி விகி தம் 7.1 சதவீதமாக இருந்தது.
- நடப்பு நிதியாண்டில் முதல் ஆறு மாத காலத்தில் ஜிடிபி வளர்ச்சி விகிதம் 6.1 சதவீதமாக இருந்தது. முதல் காலாண்டில் ஜிடிபி வளர்ச்சி விகிதம் 5.7 சதவீதமாக குறைந்தது. கடந்த மூன்று ஆண்டுகளாக இல்லாத அளவுக்கு முதல் காலாண்டில் வளர்ச்சி விகிதம் சரிவைக் கண்டது. ஆனால் இரண்டாவது காலாண்டில் பொருளாதார நடவடிக்கைகளில் நேர்மறை மாற்றங்கள் தெரிந்தது. இரண்டாவது காலாண்டு முடிவில் ஜிடிபி வளர்ச்சி விகிதம் 6.3 சதவீதமாக வளர்ச்சியடைந்தது. ஒட்டுமொத்தமாக நடப்பு நிதியாண்டின் முதல் அரையாண்டில் ஜிடிபி வளர்ச்சி விகிதம் 6.1 சதவீதமாக உள்ளது.

## 5. சாக்லேட் வண்ணத்தில் புதிய 10 ரூபாய் நோட்டு

- சாக்லேட் பிரவுன் வண்ணத்தில் புதிய 10 ரூபாய் நோட்டை (மகாத்மா காந்தி சீரியஸ்) ரிசர்வ் வங்கி வெளியிட உள்ளது.
- இதில் கோனார்க் சூரிய கோயிலின் படம் இருக்கும். 100 கோடி புதிய 10 ரூபாய் நோட்டுகள் அச்சிடப்பட்டிருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. கடந்த வாரம் புதிய வடிவமைப்புக்கு மத்திய அரசு அனுமதி வழங்கி இருக்கிறது.
- 10 ரூபாய் நோட்டில் கடந்த 2005-ம் ஆண்டு மாற்றம் செய்யப்பட்டது. அதன்பிறகு தற்போதுதான் மாற்றம் செய்யப்படுகிறது.

## 6. இணைய பயன்பாடு சராசரியாக மாதம் 1.6 ஜிபி: ரவி சங்கர் பிரசாத் தகவல்

- இந்திய வாடிக்கையாளரின் சராசரி இணைய பயன்பாடு மாதம் 1.6 ஜிபி (1600 எம்பி) என மத்திய தகவல் மத்திய தகவல் தொழில் நுட்பத்துறை அமைச்சர் ரவி சங்கர் பிரசாத் தெரிவித்திருக்கிறார்.
- கடந்த செப்டம்பர் மாத சராசரி பயன்பாடு இது என மக்களவைக்கு அளித்த எழுத்து பூர்வமான பதிலில் ரவி சங்கர் பிரசாத் தெரிவித்திருந்தார். மூன்று ஆண்டுகளுக்கு முன்பு மாதம் 70 எம்பி டேட்டா மட்டுமே பயன்படுத்தப்பட்டது.

## 7. முழு நேர ஊழல் கண்காணிப்பு அதிகாரி நியமனம்: பங்குச் சந்தை பரிவர்த்தனை வாரியம் திட்டம்

- பங்குச் சந்தை பரிவர்த்தனை வாரியமான (செபி) தனது அலுவலகப் பணியாளர்கள் மற்றும் அவர்கள் மேற்கொள்ளும் அன்றாட நடவடிக்கைகளை கண்காணிக்க தலைமை ஊழல் கண்காணிப்பு அதிகாரியை (சிவிஓ) நியமிக்க முடிவு செய்துள்ளது.
- சிவிஓ பதவியானது செயல் இயக்குநர் அந்தஸ்துக்கு இணையானதாகும். அதேபோல ஊதிய விகிதங்களும் அதே அளவுக்கு வழங்க முடிவு செய்துள்ளது. செபி செயல்பாடுகளில் தவறுகளைக் கண்டுபிடிப்பதே சிவிஓ-வின் பிரதான பணியாகும்.
- இத்தகைய பணி நியமனத்துக்கு செபி இயக்குநர் குழுமம் ஏற்கெனவே ஒப்புதல் வழங்கி இருப்பது குறிப்பிடத்தக்கது.

## 8. ஐபிஓ வெளியிட பந்தன் வங்கி திட்டம்

- கொல்கத்தாவை மையமாகக் கொண்டு இயங்கும் தனியார் துறை வங்கியான பந்தன் வங்கி பொதுப் பங்கு வெளியிட (ஐபிஓ) திட்டமிட்டுள்ளது.
- அதற்கான வரைவு அறிக்கையை பங்குச்சந்தை கட்டுப்பாட்டு வாரியமான செபியிடம் நேற்று தாக்கல் செய்துள்ளது.
- இதன் மூலம் ரூ.2,500 கோடி திரட்டப்படும் என்று தகவல்கள் தெரிவிகின்றன.

----***---